# சிதம்பரம் நகராட்சி

**2019 ம் ஆண்டு மாசி திங்கள் 16–ம் நாள் 28.02.2019 வியாழன் கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம் நடைபெறும்**

**மன்றக்கூட்டப் பொருள்**

**1)** இந்நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் பணிக்காக Jet Rodding மற்றும் De-Silting வாகனங்கள் வாங்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலம் ந.க.எண்.1191/பி3/, நாள்: 21.01.2019 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 11.01.2019 வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளை ஒப்பநதப்புள்ளி விதிமுறைகளின்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார்செய்யப்பட்டதில் தகுதியுள்ள ஒப்பந்த புள்ளிகளையும், குறைவான விலை விவரங்களை வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **தூய்மை இந்தியா திட்ட நிதி 2018–19 திடக்கழிவு மேலாண்மை பணிகள்** | | | | |
| 1 | **சிப்பம் –1**<br>சிதம்பரம் நகராட்சிக்கு 3500 லிட்டர் நீர் மற்றும் 2500 லிட்டர் கழிவுநீர் கொள்ளளவு கொண்ட 6000 லிட்டர் கழிவு நீர் அடைப்பு நீக்கும் வாகனம் (Jet Rodding) வாங்கும் பணி | **M/s.MADRAS INFRA**, 19-A, Behind Meenakshi, Weigh Bridge, Ahmed Layout Dharapuram Road, Udumalpet, Tiruppur, Tamil Nadu 642 126. | 49,00,000 | மதிப்பீட்டினை விட 0.002 % குறைவு | --- |
| | | **M/s. VETRI CONSTRUCTIONS,** 71/2, Nataraj Nagar, Edayarpalayam, Coimbatore - 641 030 | | --- | மதிப்பீட்டினை விட 6.69 % அதிகம் |
| 2 | **சிப்பம் –2**<br>சிதம்பரம் நகராட்சிக்கு தூர்வாரும் இயந்திரம் (Desilting Machinery) வாங்கும் பணி | **M/s. S.P.BUILDERS,** 216/5, Rohini Flats, Anna Nagar West, Chennai - 600 101. | 13,00,000 | மதிப்பீட்டினை விட 0.01 % குறைவு | --- |
| | | **M/s. VISHNU INFRASTRUCTURES,** 3/165-1A, Kamaraj Nagar, Kangayampalayam, Sulur, Coimbatore - 641 401. | | --- | மதிப்பீட்டினை விட 5.19 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :** 1 a) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் Jet Rodding வாகனம் வழங்க மதிப்பீட்டிடைவிட 0.002 % குறைவாக கொடுத்துள்ள **M/s.MADRAS INFRA**, 19-A, Behind Meenakshi, Weigh Bridge, Ahmed Layout Dharapuram Road, Udumalpet,

Tiruppur, Tamil Nadu 642 126 என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

b) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் De-Silting வாகனம் வழங்க மதிப்பீட்டிடைவிட **0.01** % குறைவாக கொடுத்துள்ள **M/s. S.P.BUILDERS,** 216/5, Rohini Flats, Anna Nagar West,

Chennai - 600 101. என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.4996/2014/இ1

**2)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23, 24, 30, 31 மற்றும் 32–ல் வசித்து வரும் பொதுமக்களுக்கு கனகசபை நகர் (6.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டது) உயர்மட்ட தொட்டி (OHT)–யிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. உயர்மட்ட தொட்டியில் உள்ள வால்வுகள் தேய்மானம் அடைந்துள்ளதால், குடிநீர் விநியோகத்தின்போது 40 % சதவீத குடிநீர் வெளியேறி வீணாகும் நிலை ஏற்பட்டு வருகிறது. மேலும் பின்னழுத்தம் காரணமாக, நகரின் பல்வேறு பகுதிகளில் குடிநீர் விநியோகக் குழாயில் உடைப்பு ஏற்படுகின்றது. எனவே, கனகசபை நகர் உயர்மட்ட தொட்டியில் உள்ள 200 எம்.எம். சுலைஸ் வால்வு (200 mm Sluice Valve) மாற்றுவதும், தெற்குவாணிய தெரு, சின்னகாஜியார் தெரு, விளங்கியம்மன் கோயில் தெரு மற்றும் வைப்புச்சாவடி பகுதிகளில் குடிநீர் கசிவுகளை அடைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட குடிநீர் விநியோகத்தின் ஏற்படடுள்ள பழுதுபார்ப்பு பணிக்கு ஆகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19–ன்கீழ் செலவினங்களை மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசர அவசியம்கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1931/2018/இ1)

**3)** சிதம்பரம் நகராட்சி தந்தை பெரியார் பேருந்து நிலையத்தின் முன்புறம் உள்ள வணிக வளாக கட்டிடத்தின் தென்பகுதி ஓரத்தில் சன்சேடு டிராப்புகள் (Sunshade Drops) 01.11.2018 அன்று கீழே விழுந்து சேதமடைந்ததை, ஆய்வு செய்த நகராட்சி ஆணையாளர்

அவர்கள், பொதுமக்களின் பாதுகாப்பு கருதி, கட்டிடத்தின் வலுவிற்கு பாரம் இன்றி சேமடைந்த கட்டிடங்களை (Roof Slab) இடித்து அப்புறப்படுத்திவிட்டு சேதமடைந்த பகுதியை பழுதுபார்க்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, மேற்கண்ட கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு பழுதுபார்க்கும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.55,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி பொது நிதி 2018–19–ன்கீழ் செலவினங்களை மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசர அவசியம்கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1931/2018/இ1)

**4)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.29 ல் நெடுஞ்சாலைக்கு சொந்தமான சபாநாயகர் தெருவில், மன்னார்குடி தெரு மற்றும் தெற்குவாணிய சந்திப்பில் எதிர்புறம் உள்ள கோவில் கட்டுமான பணியின்போது கழிவு நீர் ஓடையை வடபுறத்திலிருந்து தென்புறமாக சென்ற வழித்தடத்தினை மாற்றியமைத்து கடந்த ஓராண்டாக சாலையின் மையத்திலேயே கழிவு நீர் சென்று கொண்டிருந்தன. கடந்த ஒரு வாரத்திற்கு முன் கழிவு நீர் வழித்தடத்தில் திடக்கழிவுகளால் அடைப்பு ஏற்பட்டு நெடுஞ்சாலை துறை சாலையினை உடைத்து அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டு அப்பணியினை பொது மக்களின் நலன் கருதி தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்டன. தற்போது நெடுஞ்சாலை துறை மூலம் சீர்காழி பிரதான வழிச்சாலையாக இருப்பதால் சிதம்பரம் சார் ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்பேரில் சபநாயகர் தெரு அகலப்படுத்தும் பணி மற்றும் உடன் தார்சாலை அமைக்கும் பணி நடைபெற உள்ளதால் நெடுஞ்சாலையில் மையப்பகுதியில் உள்ள கழிவு நீர் வழித்தடத்தினை மாற்றியமைக்க மன்னார்குடி சாலையில் 450 எம்.எம். பைப் அமைக்கவும், மேலும் சபாநாயகர் தெருவில் நெடுஞ்சாலயின் மையப்பகுதியில் உள்ள கழிவு நீர் வழித்தடத்தினை அகற்றி கோவில் பின்புறம் பகுதியில் 45 mts க்கு மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளன. எனவே நெடுஞ்சாலை துறை மூலம் சபாநாயகர் தெருவில் நடைபெற்று வரும் அபிவிருத்தி பணிகளுக்கு ஏதுவாகவும், சபாநாயகர் தெரு பிரதான சாலையின் மேற்குபகுதி கழிவு நீர் வழித்தடத்தில், நீர் சாலையின் மேல்வராவண்ணம் தவிர்க்க, வழித்தடத்தினை மாற்றியமைக்கவும் பொது மக்களின் நலன் கருதி பணிகளை மேற்கொள்ளவும் இப்பணிக்கான உத்தேச செலவினம் ரூ.200000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. பொது மக்களின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2. இப்பணிக்கான வரவு செலவு பட்டியலை நகராட்சி பொது நிதி 2018–2019ன் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலகர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**5)** இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டு பகுதிகளிலும் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன் நிர்மாணிக்கப்பட்டு இயங்கி வரும் புதைவடிகால் இயக்குதல் பணியில் 53 எண்கள் ஆய்வுக்குழிகள் உள்ளன. நகர அபிவிருத்தி பணிகளின் போது சாலையின் மட்டம் இரண்டு அடிக்கு மேல் உயர்த்தப்பட்டுள்ளன. 50 ஆண்டுகளுக்கு மேல் இயங்கிவரும் புதைவடிகால் இயக்கத்தில் ஆய்வுக்குழிகளில் திடக்கழிவுகளால் அடைப்பு ஏற்பட்டு Manhole Cover க்கு மேல் கழிவு நீர் வரும் நிலை மற்றும் Inspection Chamber ல் அடைப்பு நீருக்கு பணிகள் மேற்கொள்ள Inspection Chamber களை கண்டறியும் பணிக்கும், அடைப்புகள் நீக்கும் பணிக்கும் மிகவும் இன்னாலன நிலை உள்ளன.

இக்குறைபாட்டினை தவிர்த்து பழைய புதைவடிகால் திட்ட இயக்கம் சீராக நடைபெற சாலைமட்டத்திற்கு மிகவும் கீழாக உள்ள Manhole Cover களை உயர்த்தும் பணிகளில் மேற்கொள்ள வேண்டியுள்ளன. எனவே பணிகளின் அவசியம் கருதி ஏற்கனவே கொள்முதல் செய்து வைக்கப்பட்டுள்ள 650 mm dia Manhole Cover களை கொண்டு 53 இடங்களில் பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் பணியின் அடைப்பு நீக்கும் பணிக்காக உள்ள வாகன ஓட்டுநரின் குறிப்பு படி புதிதாக மாற்ற வேண்டியுள்ளன. மிகவும் பராமரிப்பு செலவினம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும். Inspection Chamber களில் ஏற்படும் Over Flow மற்றும் அடைப்புகளை நீக்கும் பணிக்கும், இப்பணிக்கான உத்தேச செலவினம் ரூ.3,30,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. பொது மக்களின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2. இப்பணிக்கான வரவு செலவு பட்டியலை நகராட்சி பொது நிதி 2018–2019ன் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலகர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**6)** சிதம்பரம் நகராட்சி பகுதியில் அரசு கொள்கை முடிவுகளின்படி, நகராட்சிக்கு சொந்தமான பூங்காவிலுள்ள காலியிடங்களிலும் மற்றும் சாலை ஓரங்களிலும், குப்பைகளை தரம் பிரித்து, மக்கும் குப்பையிலிருந்து நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் நுண்ணுயிர் உர செயலாக்க மையங்கள் அமைக்கப்பட்டது. மேற்கண்ட நுண்ணுயிர் செயலாக்க மையங்களில் மேற்கூரை இன்றி உள்ளதால், அதனை உடன் அமைக்க வேண்டி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களும் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர் அவர்களும் நேரடி

ஆய்வின்போது வலியுறுத்தியதை அடுத்து, கீழ்க்காணும் நுண்ணுயிர் செயலாக்க மையங்களுக்கு மேற்கூரைகள் அமைக்கப்படுவது அவசியமாகிறது.

நுண்ணுயிர் உர செயலாக்க மையங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களின் விபரம்.

1) வாகீச நகர் பூங்கா வளாகம்.

2) கனகசபை நகர் உயர்மட்ட தொட்டி வளாகம்

3) பொன்னம்பலம் நகர் பூங்கா வளாகம்

4) கனகசபை நகர் கழிவு நீரேற்று நிலைய வளாகம்.

மேற்கண்ட பகுதிகளிலுள்ள நுண்ணுயிர் உர செயலாக்க மையங்களுக்கு Hallow Square Tube மூலம் Gulvanaiced Sheet மேற்கூரை அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.3.85 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது நிதி 2018–19–ன்கீழ் செலவினங்களை மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசர அவசியம்கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1931/2018/இ1)

**7)** சிதம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6, வேங்கான் தெருவில் உள்ள காமராஜ் மேல்நிலைப்பள்ளி கல்வி கூடத்திற்கு மிகுதியான மாணவ மாணவிகள் வந்து செல்வதாலும், அவ்வழியாக அருள்மிகு தில்லையம்மன் கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் வசதிக்காகவும், வேங்கான் தெருவில் உள்ள பாதாள சாக்கடை திட்ட தெரு ஆய்வுக்குழாய் தொட்டி (650 mm CI Manhole Cover)–யில் மூன்று எண்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால், அவற்றினை உயர்த்தி கட்ட வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்டவாறு வேங்கான் தெரு பாதாள சாக்கடை திட்ட ஆய்வுக்குழாய் தொட்டியினை (650 mm CI Manhole Cover) உயர்த்தி கட்டும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.38,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது நிதி 2018–19–ன்கீழ் செலவினங்களை மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசர அவசியம்கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1931/2018/இ1)

**8)** சிதம்பரம் நகராட்சி பகுதியில் அரசு கொள்கை முடிவுகளின்படி, நகராட்சிக்கு சொந்தமான பூங்காவிலுள்ள காலியிடங்களிலும் மற்றும் சாலை ஓரங்களிலும், குப்பைகளை தரம் பிரித்து, மக்கும் குப்பையிலிருந்து நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் நுண்ணுயிர் உர செயலாக்க மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது. அதனை தொடர்ந்து நகராட்சி எல்லைக்குட்பட்ட கனகசபை நகர் கழிவு நீரேற்று நிலைய வளாகத்தில் **சாலை ஓர நுண்ணுயிர் உர செயலாக்க மையம்** (Onsite Composting Centre) அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.**3.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது நிதி 2018–19–ன்கீழ் செலவினங்களை மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசர அவசியம்கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1931/2018/இ1)

**9)** சிதம்பரம் நகராட்சியின் பொறியாளர் குடியிருப்பு நீண்ட நாட்களாக பராமரிப்பு பணிகள் இன்றி இருந்ததால், மேற்கண்ட கட்டிடத்தில் தங்குவதற்கு இயலாத நிலை உள்ளது. இக்கட்டிடம் ஆய்வு செய்ததில், Chemical Water Proof Treatment for Existing Roof Slab, பக்க சுவர் மற்றும் மின்வசதிகள் சரிசெய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட கட்டிடத்தின் பழுதுபார்த்து, பராமரிப்பு செய்யும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.**5.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி பொது நிதி 2018–19–ன்கீழ் செலவினங்களை மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசர அவசியம்கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1931/2018/இ1)

**10)** இந்நகராட்சி பிரதான அலுவலக வளாக புதிய கட்டிட பகுதியில் நீர்வசதிக்கு ஆழ்துளை கிணறு வசதி இல்லாத காரணத்தாலும், சம்பந்தகார தெரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகளின் கழிப்பிட வசதிக்கு உள்ள ஆழ்துளை கிணறு பயனற்ற தன்மையில் உள்ளதாலும், நகராட்சி குடிநீர் லாரி மூலம் நீர் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் பொது மக்களின் குடிநீர் விநியோகம் பல முறை காலதாமதமாகின்றன. எனவே நீரந்த நீர் வசதிக்கு அலுவலக வளாகம் மற்றும் சம்மந்தக்கார பெண்கள் உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து நீரேற்றம் நடைபெறும் பணிகளுக்கும், இப்பணிக்கான உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**

1. அனுமதிக்கலாம்

2. இப்பணிக்கான செலவினத்தினை பொது நிதி மற்றும் கல்வி நிதி 2018–19ம் நிதியாண்டின் திருத்திய வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. பணியின் அவசிய அவசரம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**11)** இந்நகராட்சி பொது உபயோக குடிநீர் வசதி மற்றும் பொது கழிவறை நீர் வசதியில் மீனவர் காலனி, தில்லைகாளி கோவில், புளியந்தோப்பு, கன்னிராமன் தெரு மற்றும் செல்வ விநாயகர் நகர் சிறுமின் விசை இயங்க உள்ள ஆழ்துளை கிணறுகள் மண் அடைப்பு காரணமாக பயனற்ற தன்மையை அடைந்துள்ளன. மேலும் சுபைதா நகர் பொது கழிவறை ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் பம்ப், டெலிவரி குழாய்கள் இல்லாது இயங்காமல் உள்ளன. தற்போது கோடை பருவ காலம் துவங்கிய நிலையில் மாவட்ட நிர்வாகம் மூலம் பொது மக்கள் நலனுக்காக அமைக்கப்பட்ட அனைத்து வசதிகளும் இயங்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளன. எனவே பொது மக்களின் நலன் கருதி மேற்கூறிய பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிகளுக்கான உத்தேச செலவினம் ரூ.9.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1. அனுமதிக்கலாம்

2. இப்பணிக்கான செலவினத்தினை 2018–19ம் நிதியாண்டின் திருத்திய வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுக்கு தேர்தல் நடத்தை விதிமுறைகள் விரைவில் அமலுக்கு வர உள்ளதாலும். கோடை பருவகாலம் துவங்கி உள்ள நிலை கருதியும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் ஏற்கலாம்.

**12)** தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்பத்தூர் 2018–2019ம் ஆண்டுக்கு சிதம்பரம் தேர்வு நிலை நகராட்சிக்கு ரூ.90000/– பங்களிப்பு தொகை செலுத்திட இயக்குனர் கோயம்பத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

ந.க.எண்.10/2019/சி1

**13)** இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வராக பணிபுரிந்து கடந்த 31.10.2018 அன்று பணி ஒய்வு பெற்றுள்ள திரு.D.ரகு அவர்கள் தனக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தடை விதிக்க கோரிய சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.**30850/2018**ல் வழக்கு தொடர்ப்பட்டு நடைபெற்று வருகிறது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராகியுள்ள உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.P.சீனிவாசன் அவர்களுக்கு வழக்காடுவதற்கான செலவுத் தொகை ரூ.**15000/–** கோரியுள்ளதை மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்**

ந.க.எண்.**1369/2018**/சி1

**14)** இந்நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திரு.எஸ்.பாலு அவர்கள் நகராட்சியில் காசாளராக பணிபுரிந்த காலத்தில் நகராட்சியின் தொகை ரூ.**1.21** கோடி ரூபாயினை வங்கியில் நகராட்சி கணக்கில் செலுத்தாமல் கையாடல் செய்தற்காக த ற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் அன்னார் வழக்கு எண்.**29163/2015**ன் தீர்ப்பின் அடிப்படையில் 50% பிழைப்பு ஊதியம் இதுநாள் வரை வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அன்னார் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.**7417/2018**ல் தனக்கு வழங்கப்பட்டுவரும் பிழைப்பு ஊதியத்தினை 50% சதவீதத்திலிருந்து 75% சதவீதத்திற்கு வழங்க வேண்டி வழக்கு தொடர்ந்துயுள்ளார். மேற்படி வழக்கில் வழக்காடுவதற்கு திரு.P.சீனிவாசன், வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார், அன்னாருக்கு வழக்கிற்கான செலவுத் தொகை ரூ.**15000/–** வழங்க வேண்டியுள்ளார். மேற்படி செலவுத் தொகைக்கு மன்றத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மேற்படி வழக்கில் வழக்கறிஞர் ஆஜராகி உரிய பத்திவாரி குறிப்பு தயார் செய்துயுள்ளார். எனவே செலவுத் தொகையை அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.**1236/2011**/சி1

**15)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 27.02.2019 அன்று **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19 மற்றும் கல்வி நிதி 2018–19** கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்த சதவீதம் குறைவு** | **ஒப்பந்த சதவீதம் அதிகம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19** | | | | |
| **1** | இந்நகராட் ட்சிக்குட்பட்ட மீனவர் காலணி, சுபேதையா நகர், தில்லைகாளியம்ம ன் கோவில் தெரு, புளியந்தோப்பு, | **M/S Balan Electrical Works, No.10/2 Vellairandhan Street, Chidambaram** | 9,00,000/– | மதிப்பீட்டினை விட 0.14 % குறைவு | ––– |
| | | **M/S J.P Electrical Works, Main road, Vadalore.** | | ––– | மதிப்பீட்டினை விட 0.81 % அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கன்னிராமன் தெரு மற்றும் செல்வ விநாயகர் நகர் ஆகிய தெருக்களில் ஆழ்துளை கிணறுகள் புதிதாக அமைத்து, புதிதாகவே மின்மோட்டார் பம்புகள், பவர் கேபிள்கள் அமைக்கும் பணி. | | | | |
| | **கல்வி நிதி 2018–19** | | | | |
| **2** | சிதம்பரம் நகராட்சி அலுவலகம் மற்றும் சம்மந்தகார தெரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து நீரேற்றம் வசதிகள் மேற்கொள்ளும் பணி | **M/S Balan Electrical Works, No.10/2 Vellairandhan Street, Chidambaram** | 4,00,000/– | மதிப்பீட்டினை விட 0.15 % குறைவு | --- |
| | | **M/S J.P Electrical Works, Main road, Vadalore.** | | --- | மதிப்பீட்டினை விட 0.72 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :** 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி மதிப்பீட்டிடைவிட குறைவாக கொடுத்துள்ள **M/S Balan Electrical Works, No.10/2 Vellairandhan Street, Chidambaram** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**16)** இந்நகராட்சியின் குத்தகை உரிம இனம் யாத்திரிகள் ஊர்த்திகளுக்கு கட்டண வசூல் செய்யும் உரிமம் 2019–2020 மற்றும் 2020–2021ம் ஆண்டுகளுக்கு உரிமம் வழங்கிட பொது ஏலம் மற்றும் ஓப்பந்தப்புள்ளி கோரியத்தில் 13.02.2019 அன்று நடைபெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள எவரும் முன்வரவில்லை. 20.02.2019 அன்று நடைபெற்ற மறுஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியின் திரு.க.சந்திரசேகர் என்பவர் ரூ.15,65,000/– ஓரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி இனத்தின் கடந்த ஆண்டுகளின் குத்தகை விவரம்

| 2016–2017 | 2017–2018 | 2018–2019 | மூன்றாண்டு சராசரி |
|---|---|---|---|
| 9,66,000 | 10,14,300 | 27,00,700 | 15,60,322 |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கடந்த ஆண்டைவிட குறைவாக உள்ளது. ஆனால் மூன்றாண்டு சராசரியினை விட கூடுதலாக உள்ளது. எனவே திரு.க.சந்திரசேகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**அ.கு.**

1. திரு.க.சந்திரசேகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மூன்றாண்டு சராசரியினைவிட கூடுதலாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**17)** சிதம்பரம் நகராட்சியில் பொதுநிதி / குடிநீர் மற்றும் வடிகால் நிதி **2018–19** ன் கீழ், கீழ்காணும் பணிகளுக்கு **27.02.2019** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் | |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| | பொது நிதி 2018–19 | | | | |
| 1. | வார்டு எண் –6, வேங்கான் தெருவில் காமராஜ் மேல்நிலைப்பள்ளி அருகில் நுழைவாயில் செல்லும் பகுதியியில் 3 650 MM CI Manhole கவர்கள் உயர்த்திக் கட்டும் பணி. | 038 | திருமதி. K. முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர் | 0.05 % குறைவு | |
| | | | திரு. S. கிருஷ்ணமுர்த்தி ஒப்பந்ததாரர். | | 0.22 % அதிகம் |
| 2. | நகராட்சிக்குட்பட்ட கனகசபை நகர் சாலையோர தளத்தில் துண்ணுயில் செயலாக்க மையம் அமைக்கும் பணி. | 3.00 | திருமதி. K. முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர் | 0.68% குறைவு | |
| | | | திரு. S. கிருஷ்ணமுர்த்தி ஒப்பந்ததாரர். | | 0.2.06% அதிகம் |
| 3. | நகராட்சிக்குட்பட்ட நுண்ணுயிர் செயலாக்க(On site compost ) மையத்திற்கு பொதுமக்களின் நலன் கருதி பக்கவாட்டு பாதுகாப்பு Shelter அமைக்கும் பணி. | 3.85 | திருமதி. K. முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர் | 0.28 % குறைவு | |
| | | | திரு. S. கிருஷ்ணமுர்த்தி ஒப்பந்ததாரர். | | 1.66 % அதிகம் |
| 4. | நகராட்சி பொறியாளர் குடியிருப்பினை பக்க சுவர் அமைத்து, மின்வசதி , பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்பு செய்யும் பணி. | 5.00 | திருமதி. K. முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர் | 0.28% குறைவு | |
| | | | திரு. S. கிருஷ்ணமுர்த்தி ஒப்பந்ததாரர். | | 0.87% அதிகம் |
| 5. | சிதம்பரம் நகராட்சி தந்தை பெரியார் பேருந்து நிலையத்தின் முன்புறம் உள்ள வணிக வளாக கட்டிடத்தினை தென்பகுதி Sunside Drop – கள் சேதமடைந்ததால், சேதமடைந்த பகுதியினை இடித்து அப்புறப்படுத்தும் பணி. | 0.55 | திருமதி. K. முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர் | 0.14% குறைவு | |
| | | | திரு. S. கிருஷ்ணமுர்த்தி ஒப்பந்ததாரர். | | 0.57 % அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19** | | | | |
| **6.** | நகராட்சி மானா OHT குடிநீர் விநியோக பணி பகுதிகளில் உள்ள மாசு நீர் கலந்து வரும் நிலையினை கண்டறிந்து சரிசெய்யும் பணி | 3.00 | திருமதி. P. வளர்மதி ஒப்பந்ததாரர் | 0.15% குறைவு | |
| | | | திருமதி. K. முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர் | | 1.98 % அதிகம் |
| 7. | வார்டு எண் 23,24,30,31 மற்றும் 32 கனகசபை நகர் உயர்மட்ட தொட்டியில் உள்ள 200 MM Sluice value மாற்றம் மற்றும் தெற்குவாணிய தெரு, சின்னகாயிாா் தெரு, விளங்கியம்மன் கோயில் தெரு மற்றும் வைப்புச்சாவடிப் பகுதிகளில் குடிநீர் கசிவுகளை பழுது பார்க்கும் பணி. | 3.00 | திருமதி. K. முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர் | 0.09 % குறைவு | |
| | | | திரு. S. கிருஷ்ணமுர்த்தி ஒப்பந்ததாரர். | | 0.64% அதிகம் |

**<u>அலுவலகக் குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டில் குறைவாக கொடுத்துள்ள கலம் எண் 5 ல் காணும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்த சதவிகிதத்தினை ஏற்கலாம்.

**18)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மூன்று கோட்டங்களிலும் 63 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். நகர் முழுவதும் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள போதிய துப்புரவு பணியாளர்கள் இல்லாததால் சுகாதாரப் பணிகளை விரைவில் செய்ய இயலவில்லை. எனவே Outsourcing முறையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 142 துப்புரவு பணியாளர்களுக்கு 2019 – 2020 ம் ஆண்டுக்கு அன்னார்களின் ஊதியத்திற்கான தோராய செலவினம் ரூ.2.00 கோடிக்கும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**19)** சிதம்பரம் நகராட்சியின் 2018–2019 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2019–2020 ஆம் ஆண்டின் உத்தேச வரவு செலவு மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு.</u>**

2. மன்றம் அனுமதிக்கலாம்.

இடம்: சிதம்பரம்
நாள்: 28.02. 2019

தனி அலுவலர்,
சிதம்பரம் நகராட்சி